அனுப்புநர்

முனைவர்.பூ ஆ.நரேஷ்,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி
இயக்குநர்கள்.

ந.க.எண். 0001 59 / பி 4/2023 நாள் : 25 .08.2023

ஐயா /அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 06 – ஏப்ரல் 2023 இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் – பள்ளி மாணவர்கள்/ தனித்தேர்வர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்களில் திருத்தங்கள் குறித்து – தகவல் தெரிவித்தல் – தொடர்பாக.

– – – ––

நடைபெற்ற ஏப்ரல் 2023, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்களில் தேர்வர்களின் தலைப்பெழுத்து, பெயர் (தமிழ் / ஆங்கிலம்), தாய் மற்றும் தந்தை பெயர் (தமிழ்/ ஆங்கிலம்), பிறந்த தேதி, புகைப்படம், பள்ளியின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) ஆகியவற்றில் திருத்தங்கள் கோரி பெறப்படும் அசல் மதிப்பெண் சான்றிதழ்களை தேர்வர்களின் பத்தாம் வகுப்பு மாற்றுச்சான்றிதழ்களுடன் இணைத்து பள்ளித்தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் **28.08.2023** முதல் **08.09.2023** வரை ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு திருத்தங்கள் கோரி பெறப்படும் அசல் மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் **09.09.2023** முதல் **22.09.2023** வரையிலான நாட்களில் தங்களுக்கான **USER ID** மற்றும் **PASSWORD** பயன்படுத்தி **www.dge. tn.gov.in** என்ற இவ்வலுவலக இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், தனித்தேர்வர்களிடமிருந்து திருத்தங்கள் கோரி பெறப்படும் அசல் மதிப்பெண் சான்றிதழ்களை உரிய ஆவணங்களுடன் இணைத்து தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது

ஒம்/–

**இணை இயக்குநர் (பணியாளர்)**

நகல் :

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர்கள் (கல்வி) புதுச்சேரி – அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தங்கள் வாயிலாகவும் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்.